Crl.Misc.40.

**EXAMINATION OF THE ACCUSED**

(Section 274 of BNSS)

– – – – – – –

IN THE COURT OF

Calendar .. ..

Miscellaneous .. .. STC 1322 of 2025

Preliminary Register .. ..

STATEMENT OF ACCUSED

Name : மாரீஸ்வரி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Date : 06.01.2026

Questions : இவ்வழக்கின் புகார்தாரர் பெருமாள்சாமி மற்றும் எதிரியாகிய நீங்களும் தொழில்முறை பழக்கத்தின் அடிப்படையில், கடந்த 05.03.2020 ம் தேதி வீடு கட்ட ஒப்பந்தம் பேசி அதை கடந்த 21.12.2020 ம் தேதி புகார்தாரர் மற்றம் எதிரியாகிய நீங்களும் எற்படுத்திக்கொண்ட சம்மத பத்திரத்தில் ரூ.16,50,000/- என பேசியதாகவும், பின்பு அதற்க ரூ.12,49,000/- யை எதிரியான உங்களுக்கு வங்கி கடன் வாங்க உதவியதாகவும், பாக்கி ரூ.4,01,000/- த்தை ஆறுமாத காலத்தல் தருவதாக எதிரியாகிய நீங்கள் உறுதி அளித்ததாகவும், புகார்தாரர் உங்களை நம்பி கொரோனா காலத்தில் இயற்கையாக ஏற்பட்ட இடைநிறுத்தத்தை தவிர மீதி நாட்கள் வேலை செய்து குறிப்பிட்ட நாட்களில் உங்களிடம் புதிய வீட்டை ஒப்படைத்து இருக்கிறார். ஆனால், எதிரியான நீங்கள் சொன்னபடி மீதி பணத்தை தராமல் வீண் கால தாமதம் செய்து வந்ததாகவும், புகார்தாரர் பலமுறை கேட்டதின் அடிப்படையில், எதிரியான நீங்கள் வாதிக்கு கொடுக்க வேண்டிய ரூபாய்.4,01,000/- ஒவ்வொரு மாதத்திற்கு ரூபாய்.1,00,000/- தருவதாக கூறி, ரூபாய்.1,00,000/- கொடுத்து விட்டு மீதி தரவேண்டிய தொகைக்கு எதிரியான நீங்கள் அரசு அனுமதித்த வட்டி தொகையுடன் தருவதாக கூறியதாகவும், அப்போதும் புகார்தாரர் வட்டித்தொகை வேண்டாம் என்றும் மீதி தொகையை மட்டும் கொடுத்தால் போதும் என்று கூறியுள்ளார், எதிரியான நீங்கள் தானாக முன்வந்து வட்டி தருவதாகும் மேலும் வீடு கட்டும் ஒப்பந்தத்தில் குறிப்பிடாத வேலைகளையும் செய்து தர வேண்டும் என்றும் அதற்குரிய தொகையையும் சேர்த்து தருவதாக உறுதி அளித்ததால், புகார்தாரர் அதை ஏற்றுக்கொண்டு செய்து கொடுத்துள்ளார். ஆனால், பல மாதங்கள் ஆன பிறகும் எதிரியான நீங்கள் பல பொய்யான காரணங்கள் கூறி வீண் காலதாமதம் செய்ததாகவும்,

பின்பு எதிரியான நீங்கள் புகார்தாரரின் அலுவலகத்தில் சந்தித்து 15.03.2024 ஆம் தேதியில் ரூபாய் 5,00,000/- நீங்கள் கணக்கு வைத்துள்ள ஆக்சிஸ் பேங்க் சாத்தூர் கிளைக்குரிய காசோலை எண் 053843 என்ற எண் கொண்ட காசோலையை கொடுத்ததாகவும், 22.04.2024 ம் தேதி தங்களுடைய காசோலையை வாதி சாத்தூர் தமிழ்நாடு மெர்கென்டெல் வங்கியில் உள்ள வங்கி கணக்கில் வசூலுக்காக செலுத்திய போது, அது 24.04.2024 ம் தேதி "Funds Insufficient" என ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதாகவும், 06.05.2024 ம் தேதி எதிரிக்கு மேற்படி காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை நீங்கள் 07.05.2024 ம் தேதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு, 22.05.2024 ம் தேதி பல பொய்யான சங்கதிகளை சொல்லி பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், இது நாள் வரை பணம் தரவில்லை என்பதால் புகார்தாரர் உம்மீது மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளாரே, அது பற்றி நீர் கூறும் முகாந்திரம் என்ன? நீர் என்ன குற்றவாளியா? இல்லையா? நீர் என்ன சொல்கிறீர்?

<u>பதில் :</u>

வீடு கட்டுவதற்கு ரூபாய் 16 லட்சத்து 50 ஆயிரத்திற்கு சம்பந்த பத்திரம் எழுதிக் கொண்டது உண்மைதான். ரூபாய் 16 லட்சத்திற்கு கடன் கேட்டதில் ரூபாய் 13 லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்தான் கடன் கிடைத்தது. என்னுடைய வங்கிக் கணக்கு புத்தகம், ஏடிஎம் அட்டை மற்றும் காசோலை புத்தகத்தை பெருமாள் சாமியே வாங்கி வைத்துக் கொண்டார். மேற்படி தொகை ரூபாய் 13 லட்சத்து 50 ஆயிரத்தை அவரே எடுத்துக் கொண்டார். வீடு வாஸ்து செய்யும் போது ரூபாய் இரண்டு லட்சத்து 50 ஆயிரம், வீடு கட்டி முடித்து ஒரு ஆண்டு கழித்ததும் ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கொடுத்தேன். நான் அவருக்கு மேற்கொண்டு பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. என்னுடைய வீட்டில் பாக்கி வேலை இருந்ததால் அதை செய்து கொடுக்குமாறு கேட்டேன், அதற்கு அவர் பணம் கொடுக்க வேண்டி உள்ளது என்று கூறினார். நான் கணக்கு கொடுத்தால் பணம் தருகிறேன் என்று கூறினேன்.

2020 ம் ஆண்டு நான் வீடு கட்டுவதற்கு ஒப்பந்தம் போட்ட போது அவர்களே ஆக்ஸிஸ் வங்கியில் என்னுடைய வங்கி கணக்கை துவங்கி, அதில் இருந்து கொடுக்கப்பட்ட காசோலை புத்தகத்தை வைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு முறையும் காசோலையில் என்னிடம் கையெழுத்து வாங்க முடியாது என்று கூறி மொத்தமாக கையெழுத்து வாங்கினார்கள். இந்த வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். வீடு கட்டி முடித்த பிறகு வங்கி கணக்கு புத்தகத்தையும் ஏடிஎம் அட்டையும் மட்டும் என்னிடம் கொடுத்தார்கள், காசோலை புத்தகத்தை கொடுக்கவில்லை. நான் காசோலையில் கையெழுத்து போடும்போது அது எழுதப்பட்டிருந்ததா? என்று எனக்கு தெரியாது, எனக்கு படிக்கத் தெரியாது என்பதால் நான் அதை பார்க்கவில்லை.

பொய் வழக்கு.

கேள்வி என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2
சாத்தூர்